**செ.வெ.எண்: 04** **நாள்: 01.03.2022**

**பத்திரிக்கை செய்தி**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம், உணவு ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க சமூக நலத்துறையின் கீழ் 'சகி"- ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) செயல்படுகின்றது. அதில் பணிபுரிய கீழ்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் 25.03.2022 மாலை 5.45-ற்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**1. பதவி - வழக்குப்பணியாளர்** - 1& 2 (Case Worker 1 & 2) **பணியிடம்** - 4, **கல்வித்தகுதி** - BSW & MSW (Counselling Psychology or Development Management), **வயது வரம்பு** - 21 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். **தகுதி** - 1 வருடத்திற்கு மேலாக குடும்ப நல ஆலோசனையில் முன் அனுபவம் பெற்ற பெண் பணியாளராக 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளூரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். **தொகுப்பு ஊதியம் ரூ.12,000 மற்றும் சிறப்பு ஊதியம் ரூ.3,000**

**2. பதவி** -பல்நோக்கு உதவியாளர் (Multipurpose Helper) **பணியிடம்** -1, **கல்வித்தகுதி -** 8 வது தேர்ச்சி (அ) 10வது தேர்ச்சி / தோல்வி, **வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். **தகுதி** -நிர்வாக அமைப்பின் கீழ் பணிபுரிந்தவராகவும், சமையல் தெரிந்த பெண் பணியாளராக இருத்தல் வேண்டும். 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளூரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். **தொகுப்பு ஊதியம் ரூ.6,400/-**

**3. பதவி** - பாதுகாவலர் (Security Guard) **பணியிடம்** -1, **கல்வித்தகுதி** - 8 வது தேர்ச்சி (அ) 10வது தேர்ச்சி/தோல்வி, **வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். **தகுதி** -நிர்வாக அமைப்பின் கீழ் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளூரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். **தொகுப்பு ஊதியம் ரூ.10,000/- விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தினை நாகப்பட்டினம் மாவட்ட இணையதளத்தில் www.nagapattinam.nic.in பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:** மாவட்ட சமூக நல அலுவலகம், நீலா தெற்கு வீதி, நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம்-611001. இதனை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**